பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | புரட்டாதி 27 | ஜுல்-கஜ் 3 | இதழ் 244
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 13 - 10 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980 -10-13
PERIODICALS DIVISION
LIBRARY

## சிறிமா குடியுரிமை ரத்து:
## அரசாங்கம் எடுத்த முடிவு சரியானது - ஜனதிபதி

(தெஹிவளை)

"திருமதி சிறிமா பண்டார நாயக்காவின் குடியுரிமையை ரத்துச்செய்ய அரசு எடுத்த தீர்மானம் சரியானது" என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெஹிவளையில் நேற்றுமாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; "சட்டத்துக்கு முன் எல்லோரும் சமமே. குடும்ப அந்தஸ்துக்கோ, அரசியல் மற்றும் தனிப்பட்ட செல்வாக்குக்கோ இடமில்லை. நான்கூட குற்றவாளியாகக் காணப்பட்டால் தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயார்" என்று ஜனதிபதி கூறினர்.

'சட்டத்துக்கு முரண்பா

(8-ம் பக்கம் பார்க்க)

★ வதந்திகளைப் பரப்புவோர் ★ வன்செயல்களைத் தூண்டுவோர் ★ ஆயுதங்களை கொண்டுசெல்வோர்

# உடன் கைதுசெய்ய உத்தரவு!
# பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

**நாட்டில் வதந்திகளைப் பரப்புபவர்களையும், வன்செயல்களைத் தூண்டுபவர்களையும், துப்பாக்கி முதலிய ஆயுதங்களைக் கொண்டு செல்பவர்களையும் உடனடியாகக் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

இதுசம்பந்தமாக நாட்டின் சகல பொலிஸ்நிலையங்களுக்கும் பொலிஸ் மாஅதிபர் திரு. அன செனிவிரத்தின விடுத்துள்ள பணிப்புரையில்; கண்காணிப்பு வேலைகளைத் தீவிரப்படுத்துமாறு கேட்டுள்ளார்.

### கைதுசெய்க!

"வதந்திகளைப் பரப்புவோர் மீதும், வன்செயல்களைத் தூண்டுவோர் மீதும் துப்பாக்கி போன்ற ஆயுதங்களைக் கொண்டு திரிவோர் மீதும் உஷாராக இருக்குமாறும் சந்தேகம் ஏற்படும்பட்சத்தில் இவர்களை உடன் கைதுசெய்யுமாறும் பொலிஸ் மாஅதிபர் உத்தரவிட்டுள்ளார்.

### "தீயசக்திகள் திட்டம்"

நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்த சில தீயசக்திகள் திட்டமிட்டுவருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களைத் தொடர்ந்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் மாஅதிபர் அன செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை 13-ந் தேதி முதல் மறு அறிவித்தல் வரை கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள் ஆகியவற்றுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

16-ம் திகதி பாராளுமன்றம் கூடும்பொழுது ஜனதிபதி விசேஷ ஆணைக்குழுவின் அறிக்கையையொட்டி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமையை ஏழு வருடங்களுக்கு நீக்கிவைப்பதற்கும் பாராளுமன்ற உறுப்புரிமையைத் தடுத்துவைப்பதற்கும், திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ். பண்டாரநாயக்காவின் குடியுரிமையை ஏழு வருடங்களுக்கு நீக்கிவைப்பதற்கான பிரேரணைகள் கொண்டுவரப்படவிருக்கின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரயாணிகளை ஏற்றிச் செல்ல தனியார் வாகனங்களுக்கு இன்று முதல் தடை

(கொழும்பு)

தனியார்வாகனங்களில் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது! இத்தடைஉத்தரவு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 17ம் திகதி நள்ளிரவுவரை அமுலில்இருக்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## "குடியுரிமை ரத்து முயற்சி: அமெரிக்க சி. ஐ. ஏ. பின்னணியில் உள்ளது"
### யாழ். நகரில் 'எஸ். டி.' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

1983-ம் ஆண்டு திருமதி சிறிமாபண்டாரநாயக்கா ஆட்சிக்கு வருவார் என்பது ஜனதிபதி ஜே. ஆருக்குத் தெரியும். அதனுல்தான் சிறிமாவின் குடியுரிமையை பறிக்க முயற்சி நடக்கிறது.'

யாழ். திறந்தவெளியரங்கில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமையை நீக்கும் முயற்சிக்கு கண்டனம் தெரிவித்து நடந்த கூட்டத்தில் கம்பஹா எம். பி. திரு. எஸ் டி. பண்டாரநாயக்கா பலத்த கரகோஷத்தின் மத்தியில் மேற்கண்டவாறு நேற்று இரவு கூறினர்.

முன்னுள் நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

வட இலங்கை
நகை வியாபாரிகள் சங்கம்
8-வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் எட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் (13-10-80) திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சங்க அலுவலகத்தில் (A.K.S. மேல் மாடியில்) நடைபெறும். அங்கத்தவர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்.

சு. சிவனேசன்,
மு. பூ. மு. தாஹா.
(இணைச் செயலாளர்கள்)

7065

செம்பு டியூப்புகள் TWYFORD (ENGLISH)
வர்ண & வெள்ளை பாத்றூம் செட்டுகள் - 17-50/ 24,750/-
அலுமினியம் பூ தகடுகள் (Aluminium Diamond Sheet) 8' X 3' - 250/-
யூனியன் & யேல் கதவுப் பூட்டுகள் (ENGLISH) 225/- - 300/-
வியாபாரிகளுக்கு சலுகை உண்டு.
இறக்குமதியாளர்கள்:-
றம்ஸன்ஸ் ஹாட்வெயர் என்டர்பிரைஸ் லிமிட்டெட்,
443, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12 தொலைபேசி: 31511.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
குறைந்த செலவில் நிறைந்த சேவை
புகைப்படப் பிரதி (போட்டோ கொப்பி)
எந்தச் சான்றிதழ், ஆவணங்கள், வரைபடங்கள் ஆயினும்
பிரதி செய்து கொடுக்கப்படும்.
பிரதி ஒன்றிற்கு - 75 சதம் மட்டும்
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
மின்சார நிலைய வீதி
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
பிரதான கிளை
(ஆஸ்பத்திரிக்குப் பின்புறம்)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரும்புப்பெட்டி இரண்டு (2) நல்ல ஒரிஜினல் திண்டுக்கல் உற்பத்தி. நேரில் பார்வையிடவும். டெண்ஸி ஜுவலர்ஸ், 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7049

எங்களிடம் ஜசனுவில் இருந்து இறக்குமதி செய்த திறமான விளைவுகூடம் இருக்கிறது. தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகிருஷ்ணு றேடேர்ஸ், 92, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். 7074

## வகுப்புகள்

பரதநாட்டியம் சாஸ்திரிய முறைப்படி கற்றுக்கொடுக்கப்படும். புதிய நடன வகுப்புகள் 19-10-80 ஞாயிற்றுக்கிழமை காலை 9-05 மணிக்கு ஆரம்பிக்கப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும். செல்வி அன்னபூரணி மூத்துக்குமாரன், அதிபர், நாட்டியவிசாரதா, (சென்னை) 411/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7048

விஜயதசமி 19-10-80-ல் இருந்து ஆரம்பிக்கப்படுகிறது. வட. இல. சங்கீத சபையின் சகல பிரிவுகளும் திறமையாகக் கற்பிக்கப்படும். விரும்புவோர் கடிதமூலமோ நேரிலோ தொடர்புகொள்ளவும். சங்கீத பூஷணம் செ. செல்வச்சீராளன், 134, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 7073

## தேவை

இருபாலை, மானிப்பாய், உரும்பராய், மருதனைமடம், தீர்வேலி பகுதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற இரண்டு பரப்பு சுத்தமான உறுதியுடைய காணி தேவை. தொடர்புகொள்ளவும். K. தம்பிமுத்து, 268/5 (230/1), புதுஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 7078

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 7043

## தவறிவிட்டது

முகமாலைக்கும்-பளைக்கும் இடையில் லிஸ்ரர் இஞ்சின் தளமும் சாக்குடன் தேங்காயும் வாகனத்திலிருந்து தவறிவிட்டது. இவற்றை எடுத்தவர்கள் மு. கார்த்திகேக, இந்துக்கல்லூரி ஒழுங்கை, சாவகச்சேரி என்பவருக்கு அறியத்தந்து தகுந்த சன்மானத்தைப்பெறவும். 7058

## கல்வி

ஆறு வாரங்களில் மின்சார வேலை கற்று Electrician டிப்ளோமா பெறுங்கள். பேசும் ஆங்கிலம் இலவசம். Jaffna Technical School (பதிவு 1956-ம் ஆண்டு) 53 (30), டேவிட் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 7072

## கலைவாணிவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச் சங்கம், யாழ். நூலகம் முன் நிறுவப்பட்டிருக்கும் சரஸ்வதி சிலையைப் புனருத்தாரணம்செய்து சிறப்பான முறையில் கலைவாணி விழாவைக் கொண்டாடுவதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவருகின்றது.

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாயைச் சேர்ந்த காத்திகேசம்பிள்ளை அரசரத்தினம் அவர்களின் மரணசாதனமில்லாச் சொத்துக்களுக்குத் தத்துவம் பெறும் விடயமாக மரணமெய்தியவர்

தத்துவ வழக்கு
இல. த./3549

அரசரத்தினம் கைம்பெண் நாகபூஷணி, கனசசபை வீதி, மானிப்பாய்.
மனுதார்

எதிராக

1. அரசரத்தினம் காத்திகேசன்
2. அரசரத்தினம் பாலேந்திரா, இருவரும் மானிப்பாய்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும், 1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஆடி மாதம் 3-ந் திகதி.

நீதிமன்ற உத்தரவுப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

தயாரித்தவர்:
ஒப்பம்
**சி. இராசேந்திரன்,**
மனுதாரின் சட்டத்தரணி.
7055

# மன்னாரில் 3 கூட்டுத்தாபனக் கிளைகள்

[மன்னார்]

மன்னாரில் 3 கூட்டுத்தாபனங்களின் கிளைகள் புதுவருடத்திற்கு முன் இயங்கக்கூடியதாக திறந்து வைக்கப்படவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கட்டடப்பொருள் கூட்டுத்தாபனக்கிளை மன்னார் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் திறக்கப்படவிருக்கிறது. இதற்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருகிறது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளை மன்னார் கோட்டைக்குள் இயங்கவிருக்கிறது. கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனக்கிளை மன்னார் ஸ்டேசன் வீதியில் திறக்கப்படவிருக்கிறது. இதற்கான கட்டிடம் நிர்மாணிக்கப்படவிருக்கிறது. [அ]

மட்டக்களப்பு

# ஆசிரிய மாணவர் சந்திப்பு

(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. த. மகாசிவத்தை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி ஆசிரிய மாணவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிரந்தர விரிவுரையாளர்கள் சம்பந்தமாக அண்மையில் பத்திரிகையில் வெளிவந்த செய்திகள், பயிற்சி ஆசிரியர் விரும்பிய இடங்களில் வெளிக்களப் பயிற்சியில் ஈடுபடல் சம்பந்தமான விஷயங்களில் அக்கறை செலுத்தப்பட்டதற்கு இவர்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

# உயிர் தப்பினர்

(மன்னார்)

தாராபுரத்திலிருந்து 70 பிரயாணிகளுடன் மன்னார் நோக்கி வந்த பஸ் வண்டி மயிரிழையில் தப்பியதுடன் பிரயாணிகள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

தாராபுரத்திலிருந்து மன்னார் நோக்கிவந்த பஸ்வண்டி புகையிரதப்பாதையைக் கடக்கும்போது திடீரெனப் புகையிரதப்பாதையில் நின்றுவிட்டது. அதேசமயம் கொழும்பிலிருந்து தலைமன்னார் நோக்கி றயில்வண்டி வந்து கொண்டிருந்தது. இதனால் பீதியுற்ற பிரயாணிகள் பஸ் வண்டியை விட்டு இறங்கி விட்டார்கள். சிலர் சிறுகாயங்களுக்குள்ளானார்கள். பஸ்ஸை விட்டிறங்கிய பிரயாணிகள் புகையிரதப்பாதையில் திடீரெனநின்ற பஸ்ஸையும் தள்ளிப் புகையிரதப்பாதையை விட்டு அகற்றி பஸ் வண்டியையும் காப்பாற்றினர். (சு)

# வீடுகள் வாடகைக்குத் தேவை

காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலைக்கு அண்மையில் இரண்டு மைல் சுற்றுடலில் தண்ணீர், மின்சார வசதிகளுடன் கூடிய (இரண்டு அறைக்கு மேற்பட்ட) வீடுகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றன. வீட்டு உரிமையாளர்கள் கீழ் தரப்படும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

**திட்ட முகாமையாளர்**
மூன்றும் கட்ட
அபிவிருத்திப் பகுதி,
காங்கேசன் சீமெந்துத்
தொழிற்சாலை
காங்கேசன்துறை.
7070

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1981

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

பின்வரும் விடயங்களையும் சேவைகளையும் வழங்குவதற்குஇம்மன்றத்தோடுதம்மை பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள காகித உறையின் இடது பக்க மேல் மூலையில்'' வழங்குநர்களைப் பதிவு செய்தல்-1981'' ......எனக் குறிப்பிட்டு 1980-ம் ஆண்டு நவம்பர்மாதம் 10-ந் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ இவ்வலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பங்களும் அதிற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணத்துடன் தனித்தனியாக அனுப்பப்படல் வேண்டும்.

| | விடயங்கள் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | எழுது கருவி வகைகள் | 50-00 |
| 2 | அலுவலக உபகரணங்கள் | ......... |
| 3. | தளபாடங்கள் | ......... |
| 4. | கோலவுடைகளும், சோலவுடைகளுக்கான பொருட்களும் | ......... |
| 5. | அச்சிடுதல் | 50-00 |
| 6. | சேவை இணைப்புக்கள் (மின்சாரம்), விநியோகக் கம்பிகள் (மின்சாரம்). தெருவிளக்கேற்றல் முதலியவற்றுக்கான பொருட்கள் | 50-00 |
| 7. | மலகூட, தோட்டி வேலை களஞ்சியப் பொருட்கள் மலகூட வாளிகள், தும்புத்தடிகள், ஈர்க்குக்குக்கட்டுகள், கிருமிநாசினிகள் முதலியன | 50-00 |
| 8. | உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் | ......... |

### சேவைகள்

| | | |
|---|---|---|
| 1. | வீதிகளையும், கட்டிடங்களையும் பழுது பார்த்தலும் பேணலும் | 50-00 |
| 2. | மோட்டார் வாகனங்களை, உழவு இயந்திரங்களை நன்னிலையில் வைத்திருத்தலும் பழுது பார்த்தலும் | 50-00 |
| 3. | தோட்டி வேலைகளுக்கான, மலகூட வேலைகளுக்கான வண்டிகளுக்கு அல்லது கொண்டுசெல்வதற்குரிய ஏனைய உபாயத்திற்கு ஏற்பாடு செய்தல் | ......... |
| 4. | மலகூட, தோட்டி வேலைக்குரிய வண்டிகள். தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் முதலியன பழுது பார்த்தல் | ......... |

2. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்தே வழக்கமாகக் கூறுகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணப்படும் பட்சத்தில் வேறு வழங்குநர்களிடமிருந்து விலைக்கூறுகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்திற்குண்டு வேண்டப்படும்போது விலைக்கூறுகளைச் சமர்ப்பிக்க அல்லது உரிய கொள்வனவாணைகளை விடுக்கப்படும்போது காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விவரக்கூற்றிற்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ் செய்யப்படும்.

நகராட்சி மன்ற
அலுவலகம்,
வல்வெட்டித் துறை,
10-10-1980

**ச. ஞானமூர்த்தி,**
தலைவர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.
7069

# பிஸ்கால் விற்பனவு

## மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

ஆறுமுகம் கந்தையா ஆறுமுகம். வல்வெட்டி
—வழக்காளி

வழ. இல. 11853.

எதிராக

1. கந்தையா ஆறுமுகம்
2. டெண் இலட்சுமிப்பிள்ளை—இருவரும் வல்வெட்டி.

—எதிராளிகள்

மேற் சொல்லப்பட்ட எதிராளிகள் மேற்சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ம் திகதியின் தீர்வையின் பிரகாரம் ரூபா 7725-உம் மேலும் ரூபா 7500/-க்கு வழக்குத் தாக்கல் செய்த திகதியாகிய 14-6-72 தொடக்கம் 18-5-79 வரை 8 வீத வட்டியும் அதன் பின்னர் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 923-90 சதத்தையும் இன்றுவரை கட்டத்தவறியமையால் இதற்காக எதிரிகளுடைய கீழே சொல்லப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் குறித்த ஆதனத்திலிருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்.

## விற்பனை செய்யப்படும் ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியிறை வேவிற்புலம் தோட்டம் 8 கூடி நிபர 56 இவைகளில் வடக்குப் புறமாக நிபர 24 1/2ல் தெற்குப்புறமாக நிபர 6 1/2 இதற்கு ஆட்சிப்படி நிபர 7½ எல்லை கிழக்கு ஆறுமுகம் நாகலிங்கத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு கந்தசாமி பெண் திரவியத்துக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு செல்லத்துரை பெண் மல்லிகைக்கண்டுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு இளையதம்பி முத்துலிங்கத்துக்கும்மறுபேருக்குமுடையவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலமடங்கலிற் சொரியலாய் நிலபர 5½ல் சொரியலாய் அரைவாசியும் முழுக்காணிக்குத் தெற்குப்புறமாகவிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

**வே. கணபதிப்பிள்ளை**
பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை.

மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.
08-10-1980. 7071

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழ் ஈழ இலட்சியத்தைக் கைவிடாமல்

# மா. அ. சபையை ஏற்றதற்கான காரணத்தை தமிழ்நாடு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்"

## ராஜாராம் தேநீர் விருந்தில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"தமிழ் ஈழ இலட்சியத்தைக் கைவிடாமல் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றதற்கான காரணத்தைத் தமிழ் நாட்டுத் தலைவர்களிடம் விளக்கிக் கூறிய போது, அவர்கள் அதை ஏற்றுக்கொண்டனர். அச்சமயம் அங்கிருந்த திரு. வைகுந்தவாசனும் ஏற்றுக் கொண்டார்."

யாழ். மாநகரசபை தமிழ் நாடு சபாநாயகர் திரு. இராஜாராமுக்கு அளித்த வரவேற்பில், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது: அண்மையில் தமிழ் நாட்டில் இருந்து தலைவர்கள் சிலரை வரவேற்கும் வாய்ப்பை பெற்றுள்ளோம்.

சபாநாயகர் திரு. இராஜாராமை வரவேற்பதில் தனிச் சிறப்புண்டு. 1972-ம் ஆண்டு தந்தை செல்வா, தமிழ் நாட்டில் பல தலைவர்களைச் சந்தித்தார். அதன்பின் அப்போது அமைச்சராக இருந்த இராஜாராமை சந்தித்தார். இவரை சந்தித்த பின்தான், தந்தையின் முகத்தில் புதிய உற்சாகத்தைக் கண்டேன்.

### இராஜாராம் சந்திப்பு

ஈழத் தமிழர் பிரச்சினையில், மிகுந்த ஆர்வமும், அக்கறையும், உற்சாகமும் உள்ளவர் என்பதை அவரின் பதில்களில் இருந்து அறிந்துகொண்டோம். பின்பு பல தடவை தமிழ்நாடு சென்றபோது, அவரைச் சந்தித்தேன். சென்ற ஆண்டு சென்றபோது டெல்லி தொடர்பு அமைச்சராக இருந்தார். நான் செல்வதற்கு முதல் நாளே அவர் டெல்லி சென்று பிரதமர், ஜனாதிபதி மற்றும் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தார்.

தமிழ் நாடு அரசியல் தலைவர்களில், டெல்லியிலுள்ள பெரும் தலைவர்களில் செல்வாக்குள்ளவர் இராஜாராம். இதைச் செய்யுங்கள் என்று கூறினால் மறுப்பில்லாமல், டெல்லி தலைவர்களைக்கொண்டு செய்விக்கும் வல்லமை படைத்தவர் இராஜாராம் என்பதை நான் கூறுவேன்.

### வளரும் பெரியார் இயக்கம்

தமிழ் நாட்டில், ஆட்சியாளரும், எதிர்க்கட்சியினரும், பெரியாரின் வழித்தோன்றல்களாக இருப்பதால், தமிழ் நாடு முழுவதும் அந்த இயக்கம் வியாபித்துப் பரந்து வளர்ந்துள்ளது.

ஈழத் தமிழ் மக்கள் இழந்த சுதந்திர இறைமையை மீட்டு எடுக்க வேண்டும் எனப் போராடிவருகிறார்கள். அதற்கு எவ்வித வழியில் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை செய்து வருகின்றோம். சமீபகால நடவடிக்கைகளை, சிலர் திரித்து தமது மக்களிடையே தவறாக எடுத்துக் கூறிவருகின்றார்கள். தமிழ் இன ஒற்றுமையை குலைத்து வருகிறார்கள், தமிழ் நாட்டிலும் சில பத்திரிகைகள் தவறாக எடுத்துக் கூறிவருகிறது.

### வைகுந்தவாசனும் ஏற்றுக்கொண்டார்

தமிழ் நாட்டுத் தலைவர்களிடம் எங்கள் உண்மை நிலையை எடுத்துக் கூறுங்கள். தமிழ் நாட்டில், தலைவர்கள் கருணாநிதி, நெடுஞ்செழியன், ம. பொ. போன்ற பல பெரியவர்களுக்கு எங்கள் நிலையை எடுத்து விளக்கினேன். புலவர் பெரும் சித்திரனார் 'காணித் தகராறு' பற்றி கதையொன்றைக் கூறி, காணியின் உரிமை பெறும் வரை, ஆட்சி உரிமை பெறுவதில் தவறில்லை என்றார். இதனை அங்கீகரித்த திரு. வைகுந்தவாசனும் ஏற்றுக் கொண்டார்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் தனித்தனி காணியிருந்தது. இக்காணிகளைப் பெற்ற அந் நபர்கள் எல்லையை அழித்து ஒரே காணியாக்கிப் பயிரிட்டனர். பின்னர் காணியை விட்டு விலகி செல்லும் போது அண்ணனிடமே முழுக் காணியையும் கொடுத்துவிட்டுச் சென்றார். தம்பியோ தனது காணி வேண்டுமென வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இறுதி முடிவு வரும் வரை, தம்பி தன் பகுதியில், உழுது பயிரிட்டு, ஆட்சி உரிமை எடுப்பதில் என்ன தவறுண்டு. பல்வேறு நெருக்கடிக்குள் அண்ணன், உனது பகுதியை உழுது பயிரிடு என தம்பிக்குக் கூறினால் என்ன தவறு இருக்கிறதென புலவர் பெருஞ்சித்திரனார், திரு. வைகுந்தவாசனிடம் கேட்டார். அவர் தவறாக புரிந்திருக்கிறார். காணி வழக்கைத் தொடர்ந்து நடத்துங்களென்றும், ஆட்சியுரிமை கிடைக்குமானால் அதனை முதலில் பயன்படுத்துங்கள் எனவும் புலவர் ஆலோசனை கூறினார்.

அந்த ஆட்சியுரிமையைக் கொண்டு தமிழ்ப்பிரதேசநிலங்களை, காடுகளைத்திருத்தி அதே நேரம் முழுஉரிமை வென்றெடுக்கும் வரை பயிரிடுவோம்; பயன்பெறுவோம். தமிழினத்திற்கு சுதந்திர தமிழீழம் கிடைக்கும் வரை உழைப்போம்.

### லண்டன் தமிழர்கள்

7000 மைலுக்கப்பால் வாழும் லண்டன் தமிழர்கள், இங்குள்ள நிலைமைகளைப்புரிந்து கொள்ளாமல் சில தீர்மானங்களை எடுக்கிறார்கள். தலைவர்களான கருணாநிதி, நெடுஞ்செழியன்போன்றோர் எங்கள் முடிவு புத்திசாலித்தனமானது எனப் பாராட்டியுள்ளனர்.

எந்த நேரம் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை நாம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

உங்களிடமிருந்து அரசியல் கருத்தை எதிர்பார்த்து சங்கடத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. எங்களை நிலையை உலகிற்கு எடுத்துக்சொல்லவேண்டும்.

### தமிழக அரசிடமிருந்து உதவி

திருக்கேதீஸ்வரபுனரமைப்பு வேலைகளில் முக்கிய பங்கெடுத்து, மகாபலிபுரத்திலிருந்து தூண்கள் அனுப்பி உதவினீர்கள். இதேபோன்று திருக்கோணேஸ்வரத்தையும் கட்டி முடிக்க தமிழ்நாடு அரசிடமிருந்து உதவிபெற்றுத்தரவேண்டும்.

மதத்தால் இந்து,முஸ்லிம், கிறிஸ்தவர்களாக இருந்தாலும், ஒன்றுபட்ட இனமாக தமிழினம் வாழ்ந்துவருகிறது.

தந்தை செல்வா கிறிஸ்தவராக இருந்தபோதிலும், தமிழினம் அவரைத் தலைவராகஏற்றது. டாக்டர் நாகநாதன் கத்தோலிக்கராக இருந்த போதிலும் தமிழினம் அவரை தலைவராக ஏற்றுக்கொண்டது. இதேபோன்று அமரர்களான ஜி. ஜி. பொன்னம்பலம், திருச்செல்வம்,வன்னியசிங்கம் இந்துக்களாக இருந்த போதிலும் தமிழினம் அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொண்டது. ஒற்றுமையின் அடிப்படையில் சுதந்திரதமிழ் ஈழத்தை அமைப்போம்.

கோப்பாய்எம்.பி. திரு.எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறியதாவது: "இரண்டு வருடத்திற்கு முன் இராஜாராமைச் சந்தித்து ரசியலில் ஆழ்ந்த கருத்துக்களைப் பரிமாறினேன். இன்று அவர் விடுதலைவேண்டுமென போராடிக்கொண்டிருக்கும் தமிழ் ஈழத்திற்கு வருகை தந்திருக்கிறார். தமிழ்ஈழமக்கள் சுதந்திரப்போரில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் செய்தியை அயல்நாடான தமிழ் நாட்டிற்கு எடுத்துச் செல்லவேண்டும்.

250 மைல்களுக்குஅப்பால் சிங்களநாடு இருக்கிறது. தமிழ் ஈழத்திற்கு 20 மைல்களுக்கப்பால் தமிழ்நாடு இருக்கிறது. தமிழ் ஈழத்திற்கும், தமிழ் நாட்டிக்குமிடையில் பழைய காலத்தில் இருந்த தொடர்பு மீண்டும் ஏற்பட வேண்டும்.

மதுரையில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டில் மீண்டும் சந்திப்போம்.

தமிழீழம் தனிநாடாகசுதந்திரம்பெறும் சூழ்நிலையை ஏற்படுத்தி உலக நாடுகளின் ஆதரவைப்பெற ஆவனசெய்ய வேண்டும். உங்கள் தலைவர்கள் சிந்தனையால்,செயலால், ஒத்துழைப்பு வழங்கவேண்டும்".

யாழ். மாநகரசபை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் பேசுகையில், இரு கட்சிகள் மோதுகின்ற சபையில், கௌரமாகவும், பொறுப்பாகவும் நடந்து கொள்ளும் ஒருவரை வரவேற்பதால் மகிழ்ச்சியடைவதாகவும், தமிழர்கள் வாழும் நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து வந்திருக்கும் தாங்கள், எம்மத்தியில் ஒருசில மணித்தியாலத்தைமட்டும் செலவிடுவது குறையாக இருப்பதாகவும், இன்னொருசமயம் வரவேண்டுமென்றும்கூறினார்.

கூட்டணி உறுப்பினர் திரு. சண்முகராசா நன்றிகூறினார். (க)

## மனைவி கண்டித்ததால் கணவன் தற்கொலை

(பச்சிலைப்பள்ளி)

குடும்பப் பொறுப்பற்று அடிக்கடி சினிமா பார்த்து, வீண் செலவு செய்து வந்த கணவனை மனைவி கண்டித்தாராம். கணவன் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பண்ணை என்னுமிடத்தில் நடைபெற்றது. இ. சுந்தரம் (வயது 23) என்பவரே நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டவராவார்.

குடும்பப் பொறுப்பைச் சரிவரக் கவனியாது உழைக்கும் பணத்தைச் சினிமா பார்த்துச் செலவுசெய்து வந்ததாகவும், சம்பவத்திற்கு முதல் நாள் மனைவி நோய்வாய்ப்பட்டிருந்த பிள்ளையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்குப் பணம் கேட்டபோது, இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டு இறந்தவர் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்று மறுநாள் விதிக்கண்மையில் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் விசாரணையின் போது தெரியவந்தது.

மரண விசாரணையின்போது இறந்தவரின் மனைவி. இறப்புப் பிறப்புப் பதிவுகாரர் ஆகியோர் சாட்சியமளித்தனர், பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. திருநாவுக்கரசு சாட்சிகளை ஆஜர்செய்தார். பளைப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ம. குமாரவேலு மரணவிசாரணை நடத்தி, தற்கொலை என தீர்ப்பளித்தார்.

## அபிவிருத்திச்சபை ஆதரவில் 'கல்விவள நிலையம்'

(மன்னார் )

9-ம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மேலதிக கல்வி வசதிசெய்து கொடுக்க கல்விவள நிலையம் ஒன்று மன்னார் புனித சவேரியார் கல்லூரியில் அமைக்கப் பட்டுள்ளது

தொகுதிதோறும் கல்வி வள நிலையங்கள் அமைக்கும் கல்வி அமைச்சின் திட்டத்தின் கீழ் இக்கல்வி வள நிலையம் அமைக்கப்பட்டது.

வானொலி, ரேப்றைகோடர், தொலைக்காட்சி, நூல் நிலையம் போன்ற சாதனங்களைக் கொண்டு விசேடதிறமை பெற்ற கல்வி மான்களால் விரிவுரைகள் நடத்தியும் உயர் வகுப்பு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பணிபுரிவதும் இக் கல்விவள நிலையத்தின் பணியாகும்.

இக்கல்விவள நிலையத்தின் பொறுப்பதிகாரிகளாக மன்னார் அடம்பன் மகாவித்தியாலய ஆங்கில உதவி ஆசிரியர் திரு. ரி. டி. கி. பிலிப்புபிள்ளையும், அல்மினாமகா வித்தியாலய விவசாய விஞ்ஞான உதவி ஆசிரியர் . ஜனாப் ஏ. சி. எம். ஜவஹர்ஹாவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இக் கல்விவள நிலையம் பிரதேச கல்விமான்களதும், பிரதேச அபிவிருத்தி சபைகளினதும் ஆதரவில் இயங்கும். (ச)

## விபத்தில் பெண் மரணம்

[மட்டக்களப்பு]

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய வயோதிபப் பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மாதத்தின் பின்பு மரணமானார். இதனையடுத்து மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த மருதமுனையைச் சேர்ந்த மகரூப் என்ற இளைஞன் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி பெரிய கல்லாறு என்னுமிடத்தில் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் இடம் பெற்றது. விபத்தில் மரணமான க. மஞ்சனம் என்ற கணவனை இழந்த நான்கு பிள்ளைகளின் தாயாராவார். இவர் கடந்த 5ம் திகதி மரணமானார்.

இவரது மரணம் குறித்து விசாரணை நடாத்திய மட்டக்களப்பு நகர சடுதி மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் சாட்சியங்களை பதிவு செய்த பின்பு விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார். [ஐ]

## காந்தி சனசமூக நிலையம்

(யாழ்ப்பாணம்)

தச்சன்தோப்பு காந்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நிலைய மன்றத்தில் நடைபெற்றது. புதிய உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: திரு. வே. வ. சரவணமுத்து, உபதலைவர்: க. துரைசிங்கம், காரியதரிசி: திரு. சி. சிங்கராசா, உபகாரியதரிசி: க. நாகராசா, தனாதிகாரி: வ. ஸ்ரீதரன். 6 பேர்கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர்.

## பயிற்சி வகுப்பு

[அரியாலை]

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் வடபகுதியில் உள்ள உதைபந்தாட்டக் கழகங்களிலுள்ள வீரர்களுக்கும், கல்லூரிகளில் கல்வி கற்கும் உதைபந்தாட்ட வீரர்களுக்கும் ஒவ்வொரு சனியும், ஞாயிறும், உதைபந்தாட்டப் பயிற்சி வகுப்புக்களை நடாத்த யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ் நடவடிக்கை எடுத்துவருகிறார். [ஈ]

வவனியா பகுதியில்

## தீவிர பந்தோபஸ்துக்கு பொலிஸ் அதிபர் ஏற்பாடு

[வவனியா[

அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு வவனியா பொலிஸ் சுப்பிரிண்டன் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை எடுத்து வருகிறார்.

இப்பகுதியில் மக்கள் மத்தியில் பீதி ஏற்படாமலும் கலவரங்களுக்கு இடம் கொடுக்காமலும் இருப்பதற்கு பொலிஸ் அதிகாரிகளின் மகாநாடு ஒன்றை பொலிஸ் அதிபர் திரு. சி. வி. ஜெயசூரியா கூட்டினார். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சந்திரா ஜயவர்த்தன, உதவிப் பொலிஸ் அதிபர் எக்கநாயக்கா மற்றும் உயர்தர பொலிஸ் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் மீது கடும் கண்காணிப்பு செய்வதென்றும் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் வவனியாப் பகுதியில் இடம்பெற்ற மூன்று கொள்ளைகள் தொடர்பாக சந்தேகநபர்களைக் கைது செய்யும் பொருட்டும் அப்படியான சம்பவங்கள் தலை தூக்காத விதத்திலும் முக்கிய பாதைகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடும் செய்யப்படவிருக்கின்றது.

16-ம் திகதியன்று அசம்பாவிதங்கள் ஏற்படாத வகையில் இப்பகுதியிலுள்ள ஐ. ஆர். லி நபர்கள் மீது கடும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்யப்படவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஆண்டவனுடைய அருட்காற்று இரவு பகலாக உன் தலைக்குமேலே வீசிய வண்ணம் உளது. வாழ்வு ஆகின்ற சமுத்திரத்தில் நீ வேகமாக முன்னேற விரும்புவாயாகில், உனது மனமாகிற படகு உளதே, அதன் பாயை விரித்து விடு.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### யாழ்ப்பாணத் தண்ணீரில் 'நைட்ரஜன்' குண்டு

யாழ்ப்பாணத்திற்கு ஒரு புதிய அபாயம் ஏற்பட்டிருப்பதை தேசிய நீர்வளச் சபைத் தலைவர் டாக்டர் லெஸ்லி ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

காலத்துக்குக் காலம் யாழ்ப்பாணத்தின் குழாய் நீரையும், கிணற்றுநீரையும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சிசெய்துவந்த இச்சபை இன்று தண்ணீரிலே அளவுக்கதிகமான நைட்ரஜன் இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளது.

அளவுக்கதிகமான நைட்ரஜன்கொண்ட நீரை 'நைட்ரஜன் குண்டு' என்று வர்ணிப்பது வழக்கம். இதன் அபாயத்தைப் பொதுமக்களுக்குவிளக்கும் நோக்குடன் பிரிட்டிஷ் பத்திரிகைகள் இவ்வித தலையங்கம் தீட்டிக் குடிநீர் பற்றி எச்சரிக்கை செய்வதுண்டு.

யாழ்ப்பாணத் தண்ணீரில் இன்று காணப்படுவது 100 மில்லி கிராம்; சில இடங்களில் 150 மி. கிராம் காணப்படுவதாகவும்ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

இது எவ்வளவு அபாயமான நிலை என்பதை பிரிட்டிஷ் பத்திரிகைகளின் தகவல்களிலும் கருத்துக்களிலும் இருந்து ஓரளவிற்கு உணரமுடியும். அந்த நாடுகளிலே நீரில் 90 மி. கிராம் நைட்ரஜன்காணப்பட்டால் பொதுமக்கள் கண்டனம் பத்திரிகைகளில் பிரபல இடம்பெறும். கண்டனத்துடன் நின்றுவிடாமல் இதற்குக் காரணமான அளவுக்கதிகமான நைட்ரஜன் கொண்ட ரசாயன உரங்களை விவசாயிகள் உபயோகித்தலைத் தடுத்து நிறுத்திவிடுவார்கள்.

எனவே இன்று யாழ்ப்பாண நீரைப்பீடித்திருக்கும் அபாயம் அளவுக்கதிகமான உரத்தை உபயோகித்ததாலே வருவது ஓரளவிற்கு நாம் ஒத்துக்கொள்ளவேண்டிய விடயம்.

இது ஒரு சடுதியான மாற்றம் என்று நீர்வளச் சபைத் தலைவர் தெரிவிக்கின்றார். 1977ல் நடந்த ஆராய்ச்சியில் நீரில் 30 மி. கிராமே காணப்பட்டதாம். மூன்று வருடங்களில் இந்தநிலைஏற்பட்டது உண்மைதானோவென்று பொதுமக்கள் அதிர்ச்சியும் சந்தேகமுமடைய இடம்உண்டு.

இது உண்மையானால் எவ்வளவு தூரம் உரத்தின் உபயோகம் அதிகரித்துவந்திருக்கிறதென்பதை விளக்கத் தேவையில்லை. மக்கள் விஞ்ஞானரீதியில் செயற்கைப் பொருள்களை நாடுவது பித்துப் பிடித்த நிலைக்குவந்துள்ளது உண்மை. சுகமானவழியில் தோட்டச் செய்கையில் முன்னேறிவிட முயல்வது இன்றைய சந்ததியாரின் இயல்பு. இது இயற்கை வாழ்வுக்கு நேரடிமாறானது.

தவிர்க்கமுடியாதநிலையில் செயற்கைப் பொருட்கள் உபயோகித்தல் ஆராய்வுடன் நடத்தப்படவேண்டும். இந்த ஆராய்வை எமக்கு வழங்கக்கூடிய ஆற்றலும் அறிவும் விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்குப் போதுமானதா? இந்தமூன்று வருடத்தில்இத்தகைய பயங்கர மாற்றம் ஏற்படும் நிலையை அவர்கள் அறிந்திருந்தனரா? நீர்வளச் சபையும், விவசாயத்திணைக்களமும் இணைந்த ஆராய்ச்சிகள் மூலம் முன்கூட்டிய எச்சரிக்கை விவசாயிகளுக்குக் கிடைத்ததா?

நீர்வளச் சபைத்தலைவர் டாக்டர் ஹேரத் யாழ்ப்பாண மக்களின்குறிப்பாகக் குழந்தைகளின் சுகாதாரத்தையிட்டுக்கவலைகொண்டிருக்கிறார். இத்தகைய நீர் இரத்தத்துக்கு பிராணவாயுவை எடுத்துச் செல்லும் சக்தியைக் குறைக்குமென்பது மருத்துவ ஆராய்ச்சியின் கருத்தாகும்.

எச்சரிக்கையுடன்நீர்வளச் சபை நின்றுவிடவில்லை. உரத்தைப் பெருமளவில்உபயோகிக்கும் நிர்ப்பந்தத்தைத் தவிர்த்து எமது பழைய இயற்கை முறையையே ஆதரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை சபைத்தலைவர் விடுத்திருக்கிறார்.

சாணம், இலை. குழை பெருமளவுக்கு உபயோகித்து உரத்தைக்குறைப்பது அவசியமென்பது அவர் கூறும்ஆலோசனை. வரண்ட பிரதேசத்தில் இவ்விதபசளை இன்றைய தேவைக்குப் போதாது. எந்தக்காலத்திலும் வாடாது தழைக்கும் சக்தியுள்ள இபில் மரத்தை நடுவது நல்ல பயனளிக்குமென்ற கருத்தையும் அவர் வழங்கியிருக்கிறார்.

இபில் நடும் இயக்கத்தை இந்தக் குடாநாட்டில் சில ஸ்தாபனங்கள் ஊக்கி வருவது நாமறிந்ததே. பசளைக்கு மட்டுமல்ல, மாட்டுக்கு உணவு , வீட்டுக்கு விறகும் தரும் கற்பகத்தரு அது.

எதுஎன்னவானாலும் நீரின் நிலைகுறித்துதொடர்பான அதிகாரிகள் அனைவரும் அவசிய நடவடிக்கைகள் மூலம் குடிசனத்தை இக் 'குண்டு' வீச்சிலிருந்து பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள்.

# "இலங்கையில்நல்ல இலக்கியப் பேச்சாளர்கள் இல்லையா?"

இலங்கையிலே நல்ல தமிழ் இலக்கியப் பேச்சாளர்கள் இல்லை என்பதை ஒரு குறையாகப் பலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், இந்தியாவிலிருந்து இங்கு வரும் பேச்சாளர்களைப் பற்றி பெருமையாகப் புகழ்வதோடு இங்குள்ளவர்கள் அவர்களைப்போல் நீண்டநேரம் பொருள் பொதிந்த சொற்பொழிவுகளை நிகழ்த்முடியாது என்னும் அபிப்பிராயமும் நிலவுகின்றது. இதனுடைய உண்மை நிலையை நாம் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும்.

இந்தியப் பேச்சாளர்களுக்கு இந்தியாவிலேயே நன்றாகப் பிரபல்யமடைவதற்குப் பல வாய்ப்புகள் உண்டு. மக்கள் தொகையும், பத்திரிகைகளின் தொகையும், இலக்கியத்துறைகளும், மேடைகளும் அவர்களை வெளி உலகுக்கு காட்டுவதற்கு உதவிகொண்டிருக்கின்றன.

அரசியல்வாதிகளுக்குச் சமமாக இலக்கிய வாதிகளையும் கணிக்கின்ற மனப்போக்கும் அங்கு உண்டு. இலங்கையிலோ இலக்கிய ஆற்றல்களை வெளிக்காட்டி மக்களுக்கு அறிமுகமாகும் சூழ்நிலைகள் குறைவு. ஒருசில இலக்கிய விழாக்களில் நேர நெருக்கடிகளும் நிகழ்ச்சிநெருக்கடிகளும் திட்டமற்ற ஒழுங்கற்ற நடவடிக்கைகளும் ஒரு இலக்கியச் சொற்பொழிவை நிறைவாக நிகழ்த்த முடியாமல் செய்துவிடுகின்றன.

இலக்கியச் சொற்பொழிவாளரை "ஐந்துநிமிடத்தில் பேசிமுடியுங்கள். எம். பி. தன்னை கெதியாய் விடட்டாம். பத்து நிமிடத்தில் பேசிமுடியுங்கள். பரதநாட்டியம் ஆடவந்த பள்ளிக்கூடப் பிள்ளைகள் நித்திரை தூங்கப் போகின்றன என்று அவைத் தலைவரே பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கும் பரிதாப நிலையும் இங்கு உண்டு.

இவை மட்டுமா?

இலக்கியச் சொறபொழிவுகள் நடந்துகொண்டிருக்கும் போதே இடையில் பேச்சாளரை தடுத்து நிறுத்திவிட்டு—பேச்சுக்கள் முடிந்ததும் நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நடன நாடகங்கள் இடம்பெற இருக்கின்றன. என்று ஒலிபெருக்கி இலக்கியச் சொற்பொழிகளின் தரத்தை தெரிந்தோ தெரியாமலோ சபையோருக்கு குறைத்து மதிப்பிட்டுக் காட்டும் நிகழ்வுகளும் இங்கு அநேகம்,

முறையான தயாரிப்புகளுடன் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து இலக்கிய விழாக்களை நடாத்தி, அவ்விழாக்களில் பேசுபவர்களின்தரமான இலக்கியப் பேச்சுக்களை பத்திரிகைகளில் படங்களுடன் வெளியிட்டும், அதிகமான பத்திரிகைகள் வெளியாகியும், துறை நுணுக்கங்களுடன் இலக்கியச் சொற்பொழிவாளர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தால் இந்தியப் பேச்சாளர்களைப் போல் பலர் இங்கிருப்பது தெரியவரும்.

இருபது ஆண்டுகளுக்குமுன்னால் இலங்கைத் தமிழ்ப் பேச்சாளககள் இருபத்தொரு பேரைப்பற்றி நான் ஒரு புத்தகமே வெளியிட்டிருக்கிறேன். தமிழ் இலக்கியத் துறையில் அந்த முயற்சி புதுமையானதென்று 'ஈழநாடு' ஆசிரியர் பாராட்டி எழுதியிருந்தார். அந்த முயற்சியின் தொடர்பாகப் பல புத்தகங்கள் இன்னமும் வந்திருக்க வேண்டும். ஏன் அப்படி வரவில்லை? அதற்குரிய காரணங்கள் என்ன? என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் நான் கூறிய காரணிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

[யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த இலக்கியப் பெருவிழாவில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் பேசியது.]

இன்று பற்றிமா மாதாதிருநாள்

# செபமாலை வழியாக உலகுக்குச் சமாதானம்

## "பற்றிமா" அன்னையின்வாக்குறுதி

1917ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் ஜஸிந்த மார்ட்டோ, பிரான்சிஸ் மார்ட்டோ, லூஸியா தோசாந்தோஸ் என்ற மூன்று சிறுவர்வர்கள் வயது 7, 9, 10 பாத்திமா என்ற இடத்திலிருந்து 1 மைல் தொலைவில் வயல் வெளியில் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தார்கள். மேகமில்லாத வானத்திலிருந்து மின்னிய ஒரு மின்னல் அவர்கள் விளையாட்டை நிறுத்தியது. புயல்வீசும் போலும் என்று எண்ணியஅவர்கள் ஆடுகளை பாதுகாப்பான ஓர் இடத்துக்கு ஓட்டிச் சென்றனர். அப்போது அவர்கள் ஒரு அதிசயக் காட்சியைக் கண்டார்கள். இவ்வுலகினள் என்று கூறமுடியாத ஓர் அழகிய மாது தாய்க்குரிய அன்போடு அவர்களை நோக்கி பார்த்தபடி காணப்பட்டாள். அம்மாது ஏறக்குறை 18 வயதுடையவளாய்த் தோன்றினாள். அவள் ஆடை ஒளிமயமாயிருந்தது. வெண்பனிபோல் ஒளிர்ந்தது. இடை பொற்கச்சையால் கட்டப்பட்டிருந்தது. தங்கசரிகை வேலை செய்த முக்காடு கால் வரையிலும் தொங்கியது. கரங்கள் நெஞ்சில் பரலோகம் நோக்கி ஜெபிக்கும் பாவனையாய்க் காணப்பட்டன. விரல்களிலிருந்து ஓர் ஒளி பொருந்திய ஜெபமாலை தொங்கியது. அதன் சிலுவை வெள்ளிமயமாக ஒளிர்ந்தது. கொஞ்ச நேரத்தில் லூஸியாதெளிவடைந்து "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்" என்று அம்மாதிடம் கேட்டாள். "நான் பரலோகத்திலிருந்து வருகிறேன்" என்று இனிய குரலில் அம்மாது விடைபகர்ந்தாள். மேலும் "நீங்கள் சீக்கிரம் அதிக துன்பம் அனுபவிப்பீர்கள். ஆனால் கடவுளின் அருள் உதவி உங்களுக்குத் தேவையான பலத்தைஅளிக்கும். தினமும் ஜெபமாலையைப் பக்தியுதியானித்து சொல்லிவரவேண்டும். ஜெபமாலை வழியாகவே உலகுக்கு சமாதானத்தை நான் கொண்டுவருவேன்" என்றாள். பின்னர் தொடர்ச்சியாக நான்கு முறை திருக்காட்சி நல்கிய அன்னை இறுதிக் காட்சியில் தன்னை வெளிப்படுத்தினாள்.

ஐப்பசி 13ன் புகழ்க்காட்சி இறுதிக்காட்சியான ஐப்பசி 13ம் திகதி அன்று ஏறக்குறைய 70000க்கும் ஒரு லட்சத்திற்கும் இடைப்பட்ட மக்கள் குழுமிநிற்க அன்னை அருள் கோலம் காட்டினாள். மூன்று நிலைகளில் அக்காட்சி தென்பட்டது. ஜெபமாலை அன்னை வெண்ஆடையில் நீல முக்காடிட்டு யேசு குழந்தை வடிவில் உலகை ஆசீர்வதிக்க புனித சூசைப்பர் உடன் திருக்குடும்ப சமேயதராய்க் காட்சி நல்கியது ஒரு கட்டம். யேசுக்கிறீஸ்து வளர்ந்த மனிததோற்றத்தில் அன்போடு உலகை ஆசீர்வதித்தது. இரண்டாவது கட்டம். மூன்றாவது கட்டத்தில் அன்னை கார்மேல் மாதாவாக மாறி உத்தரியத்துடன் காட்சியளித்தாள்.

"ஏற்கனவேமிகவும் நொந்து போயிருக்கும் நமது ஆண்டவரை மக்கள் இனிமேலும் மனம் நோகச் செய்யக்கூடாது வாழ்க்கையை திருத்தி பாவ

(8-ம் பக்கம் பார்க்க)

-- அக்னஸ் சூசைப்பிள்ளை --

# இன்று வன்னியசிங்கம் நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் கு. வன்னியசிங்கம் ஞாபகார்த்த நினைவுதினஇரங்கல் கூட்டம், இன்று மாலை கொல்லங்கலட்டி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன் துறை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம், வட்டுக் கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா உட்படக் கூட்டணிப் பிரமுகர்கள் உரைநிகழ்த்துவர். (அ)

## மக்கள் கருத்து

### மயிலிட்டி சுய வீடமைப்புத் திட்டம்

8-10-80 ஈழநாடு இதழ் 6-ம் பக்கத்தில் 'மயிலிட்டியில் சுய உதவியில் 45 வீடுகள்' என்னும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும்.

இவ்வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் 30-9-1980 அன்று எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி.யு.மான திரு. அமிர்தலிங்கத்தினால் நாட்டப்பட்டதாகும். இக்கூட்டத்திற்கு மயிலிட்டி வடக்கு கிராமசேவையாளர் திரு. வ. தில்லைநடராசா தலைமைதாங்கவுமில்லை, இக்கூட்டத்தில் அவர் உரையாற்ததானும் இல்லை.

இவ்வீடமைப்புத் திட்டம் எனது காணியிலேயே மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும், இக்கூட்டம் எனது தலைமையிலேயே நடைபெற்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்,

ந. நடராசா
கிராம சேவை அலுவலகர்
காங்கேசன்துறை.

## சகல கலா வல்லியே!

நாடும் பொருளுஞ் சொல்லும்
நயமாய்த் தரவென் நாவிருந்து
பாடும் பணியாய் நாளும்
பாரில் பத்தி பரப்பிநிற்க
நீடும் நிறைகல் வியுமென்
நெஞ்சத் திருத்தி யருள்செய்து
சாடு வரவை யிலெனைச்
சமமா கவைக லாவல்லியே!

பண்ணொ டியல்சேர் பரதம்
என்நா பயில வென்நாளும்
எண்ணொ டெழுத்த றிவினை
ஏற்றி வைநா னுனைத்தமிழால்
எண்ணி லாப்பா இசைத்துன்
இசை பாடி ஏத்திநிற்க
விண்ணொ டுபாராய் வியாத்து
விளங்கு சகல கலாவல்லியே!

- கண்டாவளை 'உழவன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் விஞ்ஞானம்

# தேசிய இனமாவதற்கு அடிப்படைத்தேவைகள்

நாட்டின் கூறுகளான மக்கள்-நிலப்பரப்பு- அரசாங்கம்- இறைமை என்பனவற்றில் மக்கள் தொகையின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய இனத்தின் (Natioaality) முக்கியத்துவம் பற்றியும் கடந்தகட்டுரையில் கண்டோம்.

இன்று ஒரு இனம் தேசிய இனமாவதற்கு அடிப்படைத் தேவைகள் எவை என்பது பற்றி எடுத்து நோக்குவோம். தமிழகப் பேராசிரியர் ப. ராமசாமி அவர்கள் தனது 'ஒப்புமை அரசாங்கங்கள் (Comparative Goverament எனும் நூலில் 8 எட்டு அடிப்படைத் தேவைகள் ஒரு தேசிய இனத்தை உருவாக்கலாம் எனக் கூறுகிறார் அவை வருமாறு:

(1) இனத்தால் இணைப்பு (Unity ( Race).

(2) மொழியாலும் மரபாலும் கலாச்சாரத்தாலும் இணைப்பு (Unity of Lauguage Tradition and Culture)

(3) சமயத்தால் ஒற்றுமை (Uniuy of Religion).

(4) நிலஅமைப்பு ஒற்றுமை. (Geographic Unity)

(5) வரலாற்றுப் பொது மரபு(Historical Common Tradition).

(6) பொது அரசாங்கம் (Common Goverament)

(7) அரசியல் பொது வேட்கை (Common Politicel Aspirations).

(8) பொது நலம் (Common Interest மேற்கூறியவற்றுள் ஒன்றோ பலவோ தேசிய இனத்தை உருவாக்கலாம்.

தனி இனம் இல்லை தனி இனம் அவசியமுமில்லை தாங்கள் அனைவரும் தனி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணமும் நம்பிக்கையுமே இன ஒருமைப்பாட்டிற்கு வழிகோலி ஒரு தேசியத்தன்மையை ஏற்படுத்தும் அதுபோல ஒருமொழி பேசும் மக்களிடை மொழி தேசியத்தன்மையை வளர்க்கும் காரணியாக திகழ்வது வரலாறு 1830ம் ஆண்டில் பெல்ஜியமும் ஹாலந்தும் இணைய மறுத்ததிற்கும்-இந்திய பாகிஸ்தான் பிரிவினைக்கும்-இஸ்லாமியக்குடியரசுகளிலும் இலங்கையில் பௌத்தம் அரசாங்க மதமாக்கப்படுவதற்கும் மதம் 'தேசிய இனத்தை' கட்டி எழுப்பப்பயன்பட்டதே காரணிகள் ஆகும். பாகிஸ்தான்- பங்களாதேஸ் பிரிவினை நில அமைப்பு தேசியத்தன்மையை தோற்றுவிப்பதற்கு உதாரண . சங்கிலியைப் பற்றிப் படிக்கையிலும் பண்டாரவன்னியனைப் பற்றி அறிகையிலும் வரலாற்றுப் பொதுமரபால் நம்மிடையே தேசியத்தன்மை ஏற்படுவதை உணர்கிறோம். அவ்வாறே பொது அரசாங்கமான பிரிட்டிஷார் மேல் ஏற்

(8ம் பக்கம் பார்க்க)

# தேசிய வருமானம்: ஒரு கண்ணோட்டம்


எஸ். எஸ். தங்கராசா

அடைக்கப்பட்ட பொருளாதாரத்தில் காணப்படும் மக்களை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களை வீட்டுத் துறையினர் என்றும் அவ்வுற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுவோரை நிறுவனத் துறையினர் என்றும் பிரிக்கலாம். வீட்டுத்துறையினரிடம் நிறுவனத்துறையினர் உற்பத்திச் சாதனங்களைக் கொள்வனவு செய்து அவற்றுக்குரிய கொடுப்பனவுகளைச் செய்வர். இந்நிலையில் வீட்டுத்துறையினரிடம் வருமானமும் நிறுவனத்துறையினரிடம் செலவும் சேருகின்றது. இரண்டாவது நிலையில் கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்திச்சாதனங்களைக் கொண்டு ஆக்கப்பட்ட பண்டங்கள் சேவைகளை நிறுவனத் துறையினரிடம் வீட்டுத் துறையினர் கொள்வனவு செய்து அதற்கான கொடுப்பனவை மேற்கொள்வர். இரண்டாவது நிலையில் நிறுவனத் துறையினர் வருமானமும் வீட்டுத் துறையினர் செலவினமும் அனுபவிப்பர். மொத்தமாகக் குறிப்பிடப்பட்ட ஒருதொகை முழுவதாகச் சுழற்சியில் ஈடுபட்டால் மொத்த வருமானமும் மொத்தச் செலவினமும் சமமாயும் பொருளாதாரம் மாற்றமின்றி ஒரேவகையினதாயுமிருக்கும். இதனைப் பின்வரும் உதாரணப்படம் மூலம் விளக்கமுடியும்.

முதல் குறைந்தோ கூடியோ அமைவதின்மூலம் பொருளாதாரத்தின் சுருக்கம் விரிவு என்பன ஏற்படும் நிலைமை உருவாகலாம். பின்வரும் உதாரணம்மூலம் இதனை விளங்கமுடியும். பொருளாதாரத்தில் 100 மில்லியன் ரூபாவே சுழல்கின்றது எனக் கொண்டால் வீட்டுத் துறையினரின் வருவாய் 100 M/- நிறுவனத் துறையினரின் செலவு 100M/- உற்பத்தி 100 M/- என்பதே உண்மை வீட்டுத் துறையினர் தம் வருமானத்தில் 25 M/- யை சேமித்தால்மிகுதி 75M/-வேசுழற்சியில் ஈடுபடும். அதே சமயம் நிறுவனத்துறையினர் 25 M/- வை மேலதிகமாக முதலீடு செய்தால் 125 M/- சுழற்சியில் ஈடுபடும் சேமிப்பானது இரு நிகழ்வுகளைத் தோற்றுவிக்கலாம். ஒன்றில் 75 M/- ரூபாவிற்கு உற்பத்திப் பொருட்கள் விற்கப்பட்டிருக்கலாம். அல்லது 25 /- பெறுமதிப்பொருட்கள் விற்பனையாகாது தேங்கிக்காணப்படலாம். மாறாக நிறுவனத்துறையினரின் மேலதிக 25 M/- முதலீடு வருமானச் சுற்றோட்டத்தினை விரிவுபடுத்துவதால் அமையும். தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் சேமிப்புகள் பாதக நிலையையும் முதலீடுகள் சாதக நிலையையும் உருவாக்கும் என்ற முடிவுக்கு வரலாம்.

இறந்த பொருளாதாரத்தில் மொத்த நுகர்வு, மொத்த செலவினம் மொத்த உற்பத்தி என்பன அரசின் தலையீட்டுடன் கூடியதாக அமையும். அதேவேளை வெளிநாட்டு ஏற்றுமதிஇறக்குமதித் தொடர்புகள் தேசிய வருமானத்துள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

— (தொடரும்)




A — உற்பத்தி சாதனங்களான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி.

B — வாடகை, கூலி, வட்டி, இலாபம்.

C — பண்டங்கள், சேவைகள்.

D — விலைகள்.

அடைக்கப்பட்ட பொருளாதாரத்தில் வீட்டுத் துறையினரின் குறிப்பிடப்பட்ட வருமானமே நிறுவனத்துறையினரின் செலவினமாகவும்அச்ச செலவினமேநிறுவனத் துறையினரின் மொத்த உற்பத்தியாகவும் அவ்வுற்பத்தியே வீட்டுத் துறையின் நுகர் செலவினமாயும் சுழல்கின்றது. இச் சுழற்சியில் மொத்தவருமானம் -மொத்தச் செலவினம்- மொத்த உற்பத்தி என்பதை உணர்ந்துகொள்ள முடியும். இவ்வுண்மையால் இதுசார் பிரிதொரு உண்மையும் புலப்படல் காணலாம். அதாவது சுழற்சியில் ஈடுபடுத்தப்படும்

# அறிவியல் பூஞ்சோலை

# தமிழில்வேற்றுமை

## மொழியியல்—4

பற்றிமாகரன்

உருபுகளின் தனித்தனியான அமைப்புகளைப் பார்க்குமுன் இலக்கணவிதிகளின் முக்கியத்துவத்தையும் வரலாற்று மொழியியலின் (Historicl Linguistcs) தேவையையும் மாற்றிலக்கண முறை (Trans Formational Analysis) மூலம் இலக்கணத்தின் இன்றைய பரிணம வளர்ச்சிகள் விளக்கப்படக்கூடியதாயிருப்பதையும் மேலெழுந்தவாரியாக ஆராய்வது மாணவர்களின் சிந்தனை விரிவுக்கு வழியமைக்குமென நம்புகிறோம்

"பன்னூற்றாண்டுகளாகப் பயின்று வந்த மரபுகளையெல்லாம் திரட்டித் தொகுத்த பின்னரே இலக்கண விதிகள் உருப்பெறலாயின. ஆதலால் பன்னூறாண்டு காலப் பயன்களே இவ்விதிகள். ஆயினும் மக்கள் அறிவு வளர்ந்து கொண்டே செல்வதால்,

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே,
— நன்னூல் 462

எனும் சூத்திரத்துடன் நன்னூலை முடித்துள்ளார் பவணந்தியார். ஆதலின் பிற்காலத்தே சான்றோர் ஏற்றுக் கொள்வனவற்றுக்குப் புதுவிதி அமைக்கலாம். ஆயினும் அடிப்படை விதிகளை மாற்ற இயாது "என்று தமிழகப் பேராசிரியர்பாபொன்னப்பன் தமது "தமிழ்ப் பாடஞ் சொல்லும் முறை" பற்றிய விளக்கத்தில் குறிப்பிடுகின்றார். எனவே பழமையிலிருந்து புதுமை உருவாகுதல் காலத்தின் தேவை என்பது தெளிவாகின்றது.

அதேவேளை டாக்டர் பொன் கோதண்டராமன் தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரை ஏற்பட்ட சில மாற்றங்களைச் சுட்டிக்காட்டி வரலாற்று மொழியியலின் தேவை பற்றி கூறுவதைச் சிறிது நோக்குவோம். "கிறு கின்று என்னும் நிகழ்கால இடை நிலைகள் தொல்காப்பியனார் காலத்து வழக்கிலில்லை. கடைச்சங்க கால இறுதியிலோ அதற்குப் பின்னரோ இந்த இடை நிலைகள் தோன்றி வளர்ந்திருக்கின்றன. நன்னூலார் காலத்தில் எகர ஒகாரங்களுக்கு புள்ளியிடும் (மெய்களுக்கு புள்ளியிடுவது போல்) வழக்கம் இருந்திருக்கிறது. பாட்டி என்றசொல் தொல்காப்பியர் காலத்தில் பன்றிப்பிணவையும் நாய்ப்பிணவையும் குறித்து நின்றது ஆனல் இப்போது அதுஉறவு முறைச்சொல்லாகி நிற்கிறது. ஈதல் வாழ்தல் போன்ற சொற்கள் வள்ளுவப் பெருந்தகை காலத்தில் ஈக, வாழ்க என்ற பொருளில் நிற்கிறது. இப்போது ஈதல், வாழ்தல் என்பன தொழிற் பெயராக நிற்கின்றன. சங்க காலத்தில் வினையோடன்றிப் பெயருடனும் தன்மை முன்னிலை படர்க்கை விகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. .யாரை யோ நீ மடக்கொடியோய்' என மடக்கொடி என்ற பெயருடன் ஒய் என்ற விகுதி சேர்ந்து வருகிறது. யான் ஆசிரியன் என்று கூறுவது இக்கால வழக்கு. யான் ஆசிரியனேன் என்பது அக்கால வழக்கு. காலப் போக்கில் மொழி வளர்ச்சியில் நாம் காண்கின்ற மாற்றங்கட்குச் சில காட்டுக்கள் கொடுத்தோம். இத்தகைய மாற்றங்களைக் கண்டறிந்து திட்டவட்டமாக அறிவியல் நோக்கில் எடுத்து விளக்குவதே வரலாற்று மொழியியலின் பணியாகும்'' என்கிறார் டாக்டர் பொற்கோ.

ஆனல் வரலாற்று மொழியியல் இலக்கணத்தில் ஏற்பட்டுவிட்ட பரிணம வளர்ச்சியை சுட்டிக்காட்டுகிறதே தவிர இவ்வளர்ச்சியின் முறைமையை கூறமுடியாது நிற்கிறது. இந்நிலையில் 1960களின் ஆரம்பகாலகட்டத்தில் நோம் சோம்ஸ்கி (Noam Chom ky) எனும் உலக மொழியியல் நிபுணரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மாற்றிலக்கண முறை (Transform tioaai) யே தமிழ் இலக்கணப் பரிணம வளர்ச்சியினை உய்த்துணரவும் உதவுகிறது. இம்மாற்றிலக்கண முறையில் சொற்றொடர்கள் "தொடர்க்குறியீடுகளாக (Pharse Markers) பகுக்கப்பட்டு நோக்கப்படுகின்றன.

வேற்றுமை பற்றிய ஆராய்ச்சித் தொடர் மொழிக்கண் செய்யப்படும் ஆராய்ச்சி என முன்னரே கண்டோம். ஆனல் தமிழ் இலக்கண நூல்கள் வேற்றுமை - வேற்றுமை வகைகள் - பொருள்கள் -உருபு மயக்கங்கள் எனக் கூறுகின்றனவே தவிர தொடரில் அவற்றின் நிலையால் எவ்விதம் பொருள் வேறுபாட்டைச் செய்கின்றன எனக் கூறவில்லை. இதனை "இவ்வேற்றுமை உருபுகள் தொடரின் கண் வருகின்ற பொழுது எவ்வாறு பொருளை மாறுபடுத்துகின்றன என்பதனையோ வாக்கிய அமைப்பில் என்னவிதமான ஒழுங்கமைப்பில் வருகின்றன வென்றோ (வாக்கிய அமைப்பில்) எத்தகைய இடத்தைப் பெறுகின்றன என்பதனையோ அவர்கள் சிந்திக்கத் தவறிவிட்டார்கள்'' என யோகேஸ்வரி கணேசலிங்கம் தமது வேற்றுமையும் சொல்லொழுங்கும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். எனவே இனி வரும் ஆசிரிய - மாணவ சமுதாயங்களாவது தொடர் மொழி ஆய்வாக வேற்றுமையை எடுத்து நோக்கி நல்ல பல பயன்களை பெறுவதற்கு உதவியாக நோம் சோஸ்கியின் மாற்றிலக்கண முறையை மேலெழுந்தவாரியாகச் சற்றுப் பார்ப்போம்.

மாற்றிலக்கணத்தில் சொற்றொடர்க்குறியீடுகளாகப் பகுக்கப்படுகின்றன. இவை கிளைப்படங்கள் மூலம் குறிக்கப்படுகின்றன. ஒரு சொற் தொடர், பெயர்த் தொடர் (எழுவாய்க்கு சமானமானது) வினைத்தொடர் (பயனிலைக்குச் சமானமானது) என இரண்டாக முதலில் பகுக்கப்படுகிறது.

உ+ம் "சண்முகலிங்கம் வந்தான்."

சொற்தொடர்
| X

| Y
பெயர்த்தொடர்
(சண்முகலிங்கம்)

| Z
வினைத்தொடர்
(வந்தான்)

—தொடரும்.

# தொடர்கதைபோல தொடரும்.....

என்னைப் பின்செல்வதற்காக மனிதர்கள் உங்களைக் கேலி செய்து வேதனைப்படுத்தி எல்லாவகையான இல்லாத பொய்களையும் உங்கள் மேல் சுமத்தும்பொழுது அக்களித்து அகமகிழுங்கள். ஏனெனில் உங்களுக்கு விண்ணகத்தில் மிகப் பெரிய பரிசு ஆயத்தமாக உள்ளது. உங்களுக்கு முன்வாழ்ந்த தீர்க்கதரிசிகளையும் மனிதர்கள் இவ்வாறே அவமதித்துத் துன்புறுத்தினர்.

-கிறீஸ்து பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பெறுமதியைத்தாருங்க நீங்க உருக்கிஏதேனும் செய்யுங்க''

## புங்குடுதீவு கொலை, கொள்ளை வழக்கில் தரகர் சாட்சியம்

(ஊர்காவற்றுறை)

''என்னிடம் தியாகலிங்கம் தந்த பொருட்களில் தோடுகளின் கற்களைக் கழற்றிவிட்டு தோடுகளை நான் உருக்கிவிட்டேன். 'மாமா நீங்க பெறுமதியைப்பார்த்து இதற்குக் காசைத்தாங்க, உருக்கி ஏதேனும் செய்யுங்க, என்று தியாகலிங்கம் கூறியபடியாலேயே நான் அப்படிச் செய்தேன். உருக்கியபின் அவற்றை நான் வேறொரு கடையில் ஈடுவைத்தேன்.''

மறுநாட்காலை பத்தரைமணியளவில் (இவ்வழக்கின் முதலாவது சாட்சியான) தியாகலிங்கம் என்னிடம் காசுகேட்டார். என்னிடம் அப்போது 450 ரூபா மட்டும்தான் இருந்தது. அதைக்கொடுத்தேன். பின்னர் அவர் இரண்டு கைக்கடிகாரங்களையும் 1500 ரூபாவிற்கு விற்றுத்தரும்படி கூறினர்.''

இவ்வாறு புங்குடுதீவு அன்னம்மா கொலைவழக்கில் தொடர்ந்து சாட்சியமளித்த கொழும்பில் தரகர் தொழில் செய்யும் செய்யது முகமது ஹனீபா கூறினர்.

கடந்த ஆகஸ்ட்மாதம் 18-ம் திகதி புங்குடுதீவு இறுபிட்டியில் சின்னத்துரை அன்னம்மா என்பவரைக் கொலைசெய்தது; அவருக்குச் சொந்தமான பொருட்களைக் கொள்ளையடித்தது ஆகிய குற்றச்சாட்டுகள் புங்குடுதீவைச் சேர்ந்த சோமசுந்தரம் சுப்பிரமணியம், நல்லையா ஆனந்தன், தம்பாபிள்ளை குணலிங்கம், கிருஷ்ணபிள்ளை பரமலிங்கம் ஆகிய நால்வர் மீதும் சுமத்தப்பட்ட வழக்கு விசாரணை ஊர்காவற்றுறைநீதவான் திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது.

தொடர்ந்து சாட்சியமளித்த செய்யது முகமது ஹனீபா கூறியதாவது:-

''மறுபடி 22ம் திகதி தியாகலிங்கம் என்னிடம் வந்து காசு கேட்டார். நான் கையிலிருந்த 850ரூபாவையும் கொடுத்தேன், கைக் கடிகாரங்களையும்பார்த்து விற்றுத் தாருங்கள் என்றுகூறிவிட்டுச்சென்றூர். பின்னர் ஆகஸ்ட் 28ம் திகதி தியாகலிங்கமும் கொழும்பு ஏ.எஸ்.பி. ஸ்டீபனும் கொழும்பு சென்ரல் ரோட்டிலுள்ள 104ம் இலக்கக் கடைக்கு வந்தார்கள். நான் அப்போது வெளியில் நின்றுகொண்டிருந்தேன், அப்போது தியாகலிங்கம் என்னைக் கூப்பிட்டு 'இந்த கைக்கடிகாரமும், தோடுகளும் கள்ளச் சாமான்கள் ஆனபடியால் தாங்கோ' என்று கேட்டார். அப்போது கைக்கடிகாரங்கள் வீட்டில் இருந்தன. நான் அவற்றை எடுத்துக் கொடுத்தேன். தோடுகள் எங்கே என்று கேட்டார். நான் கெய்ஸர் வீதியிலுள்ள ஒருகடையில் அவற்றை ஈடு வைத்துவிட்டதாக கூறினேன். பின்னர் எல்லோருமாக காரில் கெய்ஸர் வீதிக்குச்சென்று காரைச் சந்தியில் நிற்பாட்டி வைத்துவிட்டு நான் மட்டும் ஈடுவைத்துள்ள கடைக்குச் சென்றேன். அப்போதுதான் யோசித்தேன் என்னையில் பணமில்லை என்பதுபற்றி. ஆனபடியால் திரும்பக் கார் இருக்கும்இடத்திற்குச் செல்லாமலும் கடைக்குச் செல்லாமலும் எனது வீட்டிற்குச் சென்று எனது மனைவியிடம் 150 ரூபா கடன் வாங்கி அங்கிருந்து சென்ரல்ரோட்டிலுள்ள எனக்குப் பழக்கமான கடையான104ம் இலக்கக் கடைக்குக் சென்று மிகுதிதேவையான 250 ரூபா வையும்வாங்கிக்கொண்டு ஈட்டை மீட்டேன். அதன்பின் தான் இதுபற்றி எனது மூத்த மகனிடம் தெரிவித்தேன்.

பின்னர் 29ம் திகதி இரவு ஏழரை மணியளவில் ஏ. எஸ். பி. ஸ்டீபன் கையில், உருக்கிய தோடுகளைக் கொடுத்தேன். அத்துடன் நான் கழற்றிய 9 சிவப்புக் கற்களையும் 2 வெள்ளைக்கற்களையும் கொடுத்தேன். (பொருட்களை அடையாளம் காட்டினர்) அதன்பின்னர் எனது வாக்குமூலம் பதியப்பட்டது.

சாட்சியை 1ம், 4ம் எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, குறுக்குவிசாரணை செய்தார்.

2ம், 3ம் எதிரிகளின்சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ், சண்முகநாதன், சட்டத்தரணி திருமதி சரோஜினி இளங்கோவனின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தார்.

இறந்தவரின் நலன்களைக் கவனிக்க சட்டத்தரணி எஸ். யோகேஸ்வரன் ஆஜராஞர்.

அரசதரப்பில் யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். எஸ். எம். நிசாம் வழக்கை நடாத்தினர்.

## நவராத்திரி விழாவும் மகிடாசுரவதமும்

(யாழ்ப்பாணம்).

வண்ணை ஸ்ரீ வீரமாகாளிஅம்மன் கோவிலில் நவராத்திரி விழா தினமும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 18ம் திகதி மகிடாசுரவதம் நடைபெறும்.

(அ


HARCROS

வடபகுதி

விவசாயிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும்

# மகிழ்ச்சிகரமான செய்தி

# ''ஹார்குறெஸ்'' விவசாய இரசாயனங்கள்

உங்கள் முன்னிலையில்

''ஹார்குறெஸ்''
தரமான விவசாய இரசாயனங்கள்
தற்பொழுது பின்வரும் எமது
மொத்தவிற்பனவு சாலையில் கொள்வனவு செய்யமுடியும்
275 1|3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளிநொச்சி – பரந்தன் – விஸ்வமடு – முல்லைத்தீவு
விவசாயிகளின் நன்மைகருதி
''ஹார்குறெஸ்''
தரமான விவசாய இரசாயன விற்பனை நிலையம் பின்வரும்
விலாசத்தில் 14-10-1980-ந் திகதி ஆரம்பித்து
வைக்கப்படவுள்ளது.
லலிதா ரேடிங் கம்பனி
சிவசுந்தரம் றேட், கிளிநொச்சி.

# ஹரிசன் அன் குறெஸ்பீல்ட்

## (கொழும்பு) லிமிட்டெட்,

330, டார்லி வீதி, :: :: கொழும்பு - 10.

போன்: 96871–7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
100-வது வெற்றித் திருநாளை நோக்கி......
"வெள்ளி விழா"
**நீயா?** வண்ணச்சித்திரம்
Next Attraction : "HE DIRTY DOZEN"
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
கே. பி. சுந்தராம்பாள்
**ஔவையார்**

**லிடோ** (யாழ்நகர்)
Daily at: 10-30 am, 2-15 pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm
RIVER OF THE GREAT CAYMAN

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-00
சிவகுமார் — ஜெய்சித்திரா — ஜெயசுதா நடித்த
**வெள்ளிக்கிழமை விரதம்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
PETER USTINV, DAVID NIVEN, MIA FARROW in
**DEATH ON THE NILE**
Color
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

**ஸ்ரீதர்** - யாழ்நகர்
தினசரி 10-30,, 2-30 6-30 & 9-45.
பலகால இடைவெளியின்பின் மக்கள் திலகத்தின் புதுப் படத்தினைக் காணும் சந்தர்ப்பம்!
புரட்சி நடிகர் தமிழக முதல்வர்
எம்.ஜி.ஆர்.
புரட்சிக் கன்னி
லதா
வில்லனுக்கோர் சக்கரவர்த்தி
நம்பியார்
நாகேஷ், தேங்காய், நிர்மலா, கண்ணன் வி. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்த

**மீனவ நண்பன்**

# உதைபந்தாட்டப் போட்டி

(அரியாலை)

யாழ். பரி. யோவான் கல்லூரி முதலாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், இலங்கை இராணுவ உதைபந்தாட்டக் கோஸ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டு கோஷ்டிகளும் உற்சாகமாக விளையாடியும் கோல் எதையும் அடிக்காமல் சமமாகிக் கொண்டன.

பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. (ஈ)

0 0 0

(அரியாலை)

யாழ். பரி. யோவான் கல்லூரியின் 19 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டப் பிரிவின் காப்டனாக செல்வன் யே. யே. புவீந்திரனும், உப-காப்டனாக செல்வன் ஜெயமார்சனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

0 0 0

(அரியாலை)

அரியாலை உதைபந்தாட்டக் கழகத்திற்கும், யாழ். பரி. யோவான் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில், பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 1-ம், 2-ம் பிரிவுகளுக்கான போட்டிகளில் முறையே 3:2, 1:0 கோல்களால் அரியாலை உதைபந்தாட்டக் கழகக் கோஷ்டிகள் வெற்றியீட்டின. (ஈ)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
**அரசகட்டளை**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி
**ஆறிலிருந்து அறுபதுவரை**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
விஷ்ணுவர்த்தன்- சந்திரகலா
**அலைகள்**

# "பின்தங்கியசமூகம்முன்னேற சமூக பொருளாதாரத் திட்டம் அவசியம்"

-- சீனித்தம்பி

(யாழ்ப்பாணம்)

"பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தோர் முன்னேற ஒரு சமூக, பொருளாதாரத் திட்டம் அவசியம் தேவை. இதனை அரசாங்கமோ அல்லது வேறு தனியார்களோ செய்வார்களென்று நம்பியிருக்காது நாங்களே இந்த ஆய்வைச் செய்வதன் மூலம் எமது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளலாம்".

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி உயர்தர வகுப்புமாணவர் ஆசிரியர் மத்தியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில், மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. மூ. சி. சீனித்தம்பி கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சிறுபான்மைத் தமிழர் வாழும் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு, ஒரு சமூக - பொருளாதார ஆய்வை மேற்கொள்ளுவதன் அவசியம் பற்றி கல்லூரி அதிபர் திரு. ஆ. இரத்தினசபாபதி தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. சீனித்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில், "அடுத்த வருடம் அபிவிருத்திச்சபைகள் அமைக்கப்பட விருப்பதால், இப்பேச்சு இன்று மிகவும் வலுவடைந்து வருகிறது. ஒரு கிராமத்தையோ, பட்டினத்தையோ, ஒரு மாவட்டத்தையோ நாட்டையோ விருத்தி செய்ய வேண்டுமாயின் முதலில் விஞ்ஞான ரீதியில் அமைந்த ஒரு திட்டம் இருக்கவேண்டும்.

"இந்த ஆய்வின் முக்கியமான நோக்கங்களாவன பல துறைகளிலும் சிறுபான்மை சமூகத்தவரின் தற்போதைய நிலையை நிர்ணயிக்க உதவும் ஒவ்வொரு கிராமத்திலும் பொருத்தமான தொழில்களை ஆரம்பித்து நம்மவரிடையே நிலவும் வேலையின்மையைப் போக்கலாம். எங்களிடையே நிலவும் குறைபாடுகளை உணர்ந்து இவைகளைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம். உள்நாடு, வெளிநாடுகளில் நிதி நிறுவனங்களிடம் பணவுதவி பெற ஆய்வு உறுதுணை செய்யும். இப்படியான ஓர் ஆய்வுசாவகச்சேரிதொகுதி முழுவதிலும் திரு. வி. என். நவரத்தினம் எம். பியின் முயற்சியினால் செய்யப்பெற்று மிகப் பிரமாதமான வெற்றியை அளித்துள்ளது.

ஆகையால் எம்மிடையே உள்ள சமூக சேவையாளர் படித்தவர்கள், தலைவர்கள் முயன்றால் இந்த ஆய்வை நாம் யாழ் குடாநாடு முழுவதும் சிறுபான்மை தமிழர் வாழும் கிராமங்களில் மேற்கொள்ளலாம்வோர், இந்த ஆய்வை கிராமங்களில் செய்ய விரும்புவோர்எனனோடுதொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்றார். (ஈ)

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 27-ம் திகதி

(திங்கட்கிழமை)

(13- 10 -1980)

மேடம்: பூமிப் பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும், எதிலும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

இடபம்: வாழ்க்கையில் தென்றல் வீசும், குழந்தையின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும், காதலர்களுக்கு இன்பமயன நாள், களஸ்திர சுகமும் உண்டு, நினைத்ததைச் சாதிப்பீர்கள்.

மிதுனம்: வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக்கூடும், கடன் தொல்லைகள் அதிகரிக்கும், சிந்தனைகளை ஒருவழிப் படுத்தி செயலாற்றவும், சுமாரான தினம்.

கடகம்: தந்தைவழித் தனமும் சேரும், பெரியார் ஒருவரின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், பூமியால் லாபமும் உண்டு, அந்தஸ்தில் உயர்வும் கரணப்படும்.

சிங்கம்: செய்தொழிலில் சிறப்பான இடம் கிடைக்கும், வெளியூர் அன்பர்கள் உங்களை வரவேற்கக் காத்திருப்பர், முயற்சிகளுக்குத் தெய்வத்தின் துணையுண்டு.

கன்னி: எதிர்பாராத பொருள் வரவுக்கு இடமுண்டு, பொதுசன மதிப்பும் கிடைக்கும், சகோதரத்தினால் சுகமும் உண்டு, நன்மையான காரியங்களில் பணச்செலவுகள் ஏற்படும்.

துலாம்: குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும், திடீர் நடவடிக்கை எடுப்பதன்மூலம் நீங்கள் வருந்த நேரிடலாம், சிந்தனைக் கிலேசமும் செய்கருமங்களில் மந்தநிலையும் உண்டு.

விருச்சிகம்: மனையில் பூசல் தோன்றி மறையக்கூடும், தனிமையை விரும்புவீர்கள், தொழில்புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றும், வேண்டியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

தனுசு: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாகக் காட்சியளிக்கும், இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப்படுவீர்கள், சுற்றுலா மேற்கொகொள்ள விருப்பம் மேலிடலாம்.

மகரம்: எதிலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள், தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும், பெரியவர் ஒருவருடன் கருத்துவேற்றுமை தோன்றலாம்.

கும்பம்: எண்ணம்போல் வாழ்வு மலரும், சமூகத்தில் மதிப்பு உயரும், வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றம் உண்டு சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

மீனம்: வருமானம் திருப்திகரமாக இருக்கும், பத்திரவழியால் புதினமும் கிடைக்கும், புதுமையான் எண்ணங்களும் உருவாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# அமிரிடம் குசலம் விசாரித்த ஜனாதிபதி

(கொழும்பு)

ஓடும் விமானத்திலிருந்த எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் விமான நிலையத்திலிருந்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன குசலம் விசாரித்தார்.

கொழும்பு - யாழ்ப்பாணம் தனியார் விமான சேவையை நேற்றுமுன்தினம் முதன் முதலில் ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்கு விமானம் புறப்பட்ட சற்றுநேரத்தில் விமானக்கட்டுப்பாட்டு அறையூடாக விமானியுடன் தொடர்பு கொடுக்கப்பட்டது. முதலில் விமானியுடன் கதைத்த திரு. ஜெயவர்த்தன அடுத்து எதிர்க்கட்சித்தலைவரை அழைத்தார்.

விமானியின் அறைக்கு அழைக்கப்பட்ட திரு. அமிர்தலிங்கமும், ஜனாதிபதியும் சிறிது நேரம் அளவளாவினர். (கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயதசமியில்
படிப்பைத் தொடங்க
பாலர்கள் விரும்புவது
**வண்ணத்தமிழ்**
அரிச்சுவடி
அழகான வண்ணப்படங்களுடன்
விலை ரூபா 2 -
**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

## கவாஸ்கர் மீண்டும் இந்திய காப்டன்

புதுடில்லி, அக். 12

ஆஸ்திரேலியாவுக்கும் நியுஸிலாந்துக்கும் இவ்வாண்டு இறுதியில் சுற்றுப்பயணம் செய்யும் இந்திய கிரிக்கட் கோஷ்டிக்கு சுனில் கவாஸ்கர் தலைமைவகிப்பார் என இந்திய கிரிக்கட் சபை அறிவித்துள்ளது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் கிரிக்கட் டெஸ்ட் போட்டிகளுக்கும் தலைமை தாங்கிய சுனில் கவாஸ்கர் கிரிக்கட்டிலிருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்திருந்தார். எனினும் இப்போது மீண்டும் தாம் இந்திய கோஷ்டிக்குத் தலைமைதாங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (இ)

# ‘அபிவிருத்திநிதி ஒருசதமும் திருப்பிஅனுப்பப்படவில்லை’

## அமைச்சர் காமினிக்கு யோகேஸ் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி பெரும்பாலும் செலவிடப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டதென்றும் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அக்கறையில்லையென்றும் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தியமைச்சர் திரு. காமினிதிஸநாயக்கா ஒரு வைபவத்தில் கூறியதை மறுத்து யாழ். எம். பி, திரு. வெ. யோகேஸ்வரன்அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:

“1978ம் ஆண்டிற்கான யாழ். மாவட்டத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் அவ்வளவும் அபிவிருத்தி வேலைகளில்செலவிடப்பட்டுள்ளது. அப்படியிருக்க சமீபத்தில் இங்கு வருகைதந்த அமைச்சர் காமினி திஸநாயக்கா உண்மைக்குமாறான முறையில் ஒதுக்கப்பட்ட 2 கோடியே 20 லட்சம் ரூபாவில் 80 லட்சம் மட்டும் வடபகுதித் தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களால் செலவிடப்பட்டதென்றும் மிகுதிப்பணம் திருப்பி அனுப்பப்பட்டதென்றும் பேசியுள்ளதாக பத்திரிகைகள் வாயிலாக அறிகிறேன். அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சரான காமினிதிசநாயக்கா இவ்வாறு வீரசிங்கம் மண்டபத்தில்நடைபெற்ற தேசிய இளைஞர் மன்றக் கருத்தரங்கில் கூறியதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி வேண்டுமென்றே எமக்குமேல் அபாண்டத்தைச் சுமத்தும் செயலாகும். அமைச்சரின் இக் கூற்றில் எதுவித உண்மையுமில்லை; அமைச்சரின் பொறுப்பற்ற பேச்சை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். திரு. காமினி திசநாயக்கா திட்டமிடல் அமைச்சர் அல்ல. யாழ். மாவட்ட அபிவிருத்திக்கும் பொறுப்பானவர் அல்ல. ‘‘கேள்விச்செவியன் ஊரைக் கெடுத்தான்’’ எனும் முதுமொழிக்கேற்ப யாரோ கூறிய தவறான கருத்தை அமைச்சர் ‘கிளிப்பிள்ளை’ போல் தவறாகக்கூறியது கவலைக்குரியதே. மறுமுறை யாழ்ப்பாணம் வரும்போது இவர் கூறிய யாவற்றையும் மக்கள் மறந்துவிடுவார்கள் என்று எண்ணுகிறார் போலும்.

இவ்விடயம் சம்பந்தமாக யாழ். மாவட்டபாராளுமன்ற கூட்டணி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அமைச்சரின் கூற்று உண்மைக்கு மாறானது எனத் தகுந்த ஆதாரங்களுடனும் புள்ளிவிபரங்களுடனும் எடுத்துக்கூறமாட்டார்கள் என்று அமைச்சர்நினைத்துவிட்டார் போலும். உண்மை நிலையைத் தமிழ்மக்களும் அமைச்சர் அவர்களும்தெரிந்து கொண்டு அவர்களுக்கு தவறான கருத்தை தெரிவித்தவர்களைப் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் கூட்டணி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் விரைவில் விஷயத்தை அம்பலப்படுத்துவார்கள்.

## அமெரிக்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:

‘‘1956ம்ஆண்டு செப்டம்பர் 26ம் திகதி எஸ். டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்கா அமெரிக்க மத்தியஉளவு ஸ்தாபனத்தினால் சாகடிக்கப்பட்டார். அதேபோன்று 1980 அக்டோபர் 16ம் திகதி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை அரசியலில் சாகடிக்க, அமெரிக்க சி. ஐ. ஏ. முயற்சி மேற்கொண்டுள்ளது’’. (க)

(மிகுதி நாளை வரும்)

## எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தண்ணீர் ‘நைட்ரஜனை’ கூடுதலாகக் கொண்டுள்ளதென்று நீர்வளச் சபைத் தலைவர் டாக்டர் லெஸ்லி ஹேரத் தெரிவித்துள்ளார்.

அளவுக்கதிகமான ஐதரசன் கொண்ட நீரை ‘நைட்ரஜன் குண்டு’ என்றே குறிப்பிடுவார்கள். யாழ்ப்பாண நீரில் 150 மில்லிகிராம் நைட்ரஜன் இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவித்தன. விஞ்ஞான ரீதியாக இருக்கக்கூடிய நைட்ரஜன் அளவு 45 மி. கிராமாகும்.

யாழ்ப்பாணத் திலுள்ள குழாய் நீரைப் பரிசோதித்தபோதே நீர்வளச்சபை இதனைக் கண்டுபிடித்தது, இதனை ஊர்ஜிதம்செய்ய மேலும் 1500 கிணறுகளில் பரிசோதனைசெய்தனர். குறிப்பாகக் குழந்தைகளுக்கு இத்தகைய நீர் கேடு விளைவிக்குமென்று கருதப்படுகிறது.

— — —

## உடன்கைது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பில் பாதுகாப்பு ஒழுங்குகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பு மாநகருக்குள் வரும் வாகனங்களும் மாநகர எல்லைக்குள்ளிருந்து வெளியே செல்லும் வாகனங்களும் ஆயுதம் தரித்த பொலிஸாரினால் சோதனையிடப்படுகின்றன. வீதிகளிலும், முக்கிய இடங்களிலும் ஆயுதம் தரித்த பொலிஸார் காவல்புரிகின்றனர்.

## அரசாங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக நடந்துகொண்டதற்காக அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் பதவி இழந்தார். அமெரிக்க செனட்டர் ஒருவர் பதவியிழந்தார். பிரிட்டனிலும் பல சம்பவங்கள் நடந்துள்ளன’ என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## பிரயாணிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்காலப் பகுதியில் பிரயாணிகள்; ரயில், பஸ்சேவைகளை மட்டும் பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக மத்திய போக்குவரத்துச்சபை விடுத்துள்ள அறிக்கையில்; வான், மினி பஸ் மற்றும் தனியார் வாகனங்களில் பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடாது என்றும், இதனை மீறி தனியார் போக்குவரத்துச் சேவையை நடத்தவோர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும், போக்குவரத்துச்சேவை நடத்த பஸ் போக்குவரத்து சபை வழங்கிய உத்தரவுப்பத்திரம் ரத்துச்செய்யப்படுமென்றும் தெரிவித்துள்ளது.

## அரசியல்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட வெறுப்பு இலங்கையின் இரு தேசிய இனங்களான தமிழர் - சிங்கள வரைக் கைகோர்க்க வைத்து நாட்டுக்கு சுதந்திரம் வழங்கியதை நாமறிவோம். அதுபோலவே அரசியலில் பொதுவேட்கை உடைய வடக்கு-கிழக்கு-மலையக தமிழ் மக்கள் பிரதேச வேறுபாடுகளை மறந்து தந்தை செல்வாவின் தலைமையை ஏற்றிருந்த ஒரு காலகட்டம் இலங்கையில் நிலவியது. சீன-இந்திய, இந்திய-பாகிஸ்தான் போர்களில் ‘‘பொதுநலம்’’ இந்தியாவில் தேசியத் தன்மையை ஊட்டியது. இவ்வாறாக மேற்கூறிய எட்டு அடிப்படைத் தேவைகளுக்கும் தேசிய இனத்தை தோற்றுவிக்கும் சக்தி இருப்பது தெட்டத் தெளிவாகிறது.

— தொடரும்

## செபமாலை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னிப்பு பெறவேண்டும்’’ எனக் கேட்ட அன்னை ‘‘நானே ஜெபமாலை மாதா என் மகிமைக்கென இங்கு ஒரு ஆலயம் கட்டி ஒவ்வொரு நாளும் செபமாலை செபிக்கவேண்டும்’’ எனக் கேட்டாள்.

# ‘தமிழரிடை ஒற்றுமையீனம் மிகப் பெரியகுறை’

## தமிழக சபாநாயகர் கவலை

(யாழ்ப்பாணம்)

‘‘தமிழ் நாட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஒரு அடி உயரமான நடராஜர் சிலை ஒன்று அமெரிக்காவில் 75 லட்சம் ரூபாவிற்கு ஏலம் போனது. இதிலிருந்து தமிழர்கள் கலை எவ்வளவு உயர்ந்ததென்பதை அறிந்து கொள்ளலாம்.’’

யாழ். மாநகரசபை அளித்த வரவேற்பில்பேசிய தமிழ்நாடு சபாநாயகர் திரு. ராஜாராம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் தலைமையில் நடந்த இவ்வரவேற்பில் திரு. ராஜாராம் மேலும் கூறியதாவது:

‘‘சிலப்பதிகாரம், குறள் போன்ற பெரும் இலக்கியங்களைக் கொண்டது தமிழ்மொழி. உலகத்தில் பரந்து வாழும் தமிழினத்தை ஒன்றுசேர்க்கும் பணியில் அறிஞர் அண்ணா ஈடுபட்டார்.

‘‘நான் பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்கு உள்ள தமிழர் நிலைபற்றி ஆராய்ந்து அறிந்துவந்துள்ளேன். தமிழ் சமுதாயம் எங்கு வாழ்ந்தாலும் ஒற்றுமையாக, வீரமும் விவேகமும் உள்ளவர்களாக வாழவேண்டும். அவர்களில் ஒற்றுமை இல்லாததுதான் மிகப்பெரிய குறைபாடு.

‘‘தந்தை செல்வா தள்ளாத வயதிலும், மாடிப்படியேறி என்னை சந்திக்க வந்தார். தந்தை செல்வாவின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தாவிடின் நான் கடமையிலிருந்து தவறியவனுவேன்.

‘‘உலக அரங்கில் எந்த ஒரு நாட்டிலும் உழைக்கும் இனம் தமிழ் இனம்தான். உலகில் 9 நாடுகளுக்குச் சென்றிருந்தேன். எந்த நாட்டிலும்சரி தமிழர்கள் கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்களை டெலிவிஷனிலும், ரேப்பிலும் போட்டு உணர்ச்சி பெறுகிறார்கள். ஆபிரிக்கா நாட்டில் ‘பல்லாங்குழி’ விளையாடுகிறார்கள். மற்றொரு நாட்டில் ‘கழைக்கூத்து’ ஆடுகிறார்கள். தமிழரின் கலை கலாச்சாரம், உலகநாடுகளெங்கும் பரவியுள்ளது.

‘‘நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் நல்ல ஒரு தலைவரை பெற்றிருக்கிறீர்கள். நான் பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, இன்று எம். ஜி.ஆருடன் சேர்ந்து பணியாற்றுகிறேன். இவ்வளவு பேருடன் வாழ்ந்தாலும்கூட ஒரு முக்கிய குறையுண்டு. அமிருக்கு அமைந்தது பேன்ற துணைவியார் இவர்களுக்கு அமையவில்லை. துணைவியார் பேச ஆரம்பித்தால், அமிரிலும்பார்க்க வேகத்துடனும் உணர்ச்சியுடனும பேசுவகைக் கேட்டிருக்கிறேன். தமிழ்த் தாய்க்குலம் இதனையிட்டுப் பெருமைப்படவேண்டும்,அந்த அம்மையாரை பாராட்டுகிறேன்’ யாழ்ப்பாணத்தமிழ்மக்களின் விருந்தோம்பலை அறிந்துகொள்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் போதாதெனக் கூறப்பட்டது. 35 லட்சம் தமிழ்மக்கள் சார்பில் ‘அமிர்’ விருந்தளித்தார். இது போதாதா? வேறு ஒன்றும் தேவையில்லை’’ என்றார் அவர்.

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சிவபாலன்

திருகோணமலை செல்லம்ஸ் நகைக்கடை உரிமையாளர் பொ. சிவபாலன் அகால மரணமானர். இவர் யாழ்ப்பாணம் வெள்ளாந்தெரு காலஞ்சென்ற பொன்னம்பலம், செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவராஜன், சிவகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரம், சண்முகலிங்கம், காந்திமதி, தையல்நாயகி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புக் சகோதரரும், கோபாலகிருஷ்ணன், ராமநாதன், தர்மநாதன் (செ. கந்தசாமி அன் சன்ஸ் உரிமையாளர்கள்) ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னரது பூதவுடல் இன்றுதிங்கட்கிழமை (13-10-80) மாலை 4 மணியளவில் வில்லூரன்றிமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

7080

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registred as a News Paper at General Post Office Sri Link under No. QB 948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone,389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org